# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,304 — 1937 ம் ஷு ஆடிமீ 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உடுப்பில வாய்க்கால் முகாந்திரத்திற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 731. குறிச்சி—உடுப்பில.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கெற்றலியேகும்புற .. | நெல்வயல் (இப்போ அணையின் பகுதி) | பயகல அல்லது முனசிங்க ஆராச்சிகே அபிலஸ்அப்பு (½ பங்கு), குமறபெலி ஆராச்சிகே டொன் ஜோன் (¼) பங்கு), யஸ்னுயக்க அப்புஹாமிலகே டொன் ஜுவானிஸ் (¼ பங்கு) எல்லோரும் உடுப்பில | 0 | 0 | 1·5 |
| 2 | டிை .. | நெல்வயல் (இப்போ வாய்க்காலின் பகுதி) | டிை .. .. | 0 | 0 | 2·1 |
| 3 | டிை .. | நெல்வயல் .. | டிை .. .. | 0 | 0 | 0·5 |
| 4 | கெற்றலியேகும்புற அல்லது பண்டாறகும்புற | டிை .. | புஞ்ஜமுமுதியான்சிலாகே சற பெறிரு, உடுப்பில .. | 0 | 0 | 24·6 |
| 5 | டிை .. | நெல்வயல் ( இப்போ வாய்க்காலின் பகுதி) | டிை .. .. | 0 | 0 | 11·5 |
| 6 | டிை .. | நெல்வயல் (இப்போ வாய்க்காலோடுள்ள அணையின் பகுதி) | டிை .. .. | 0 | 0 | 11·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனாதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஷு (ஒகஸ்ற்) ஆவணி மாசம் 23 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1937 ம் (ஜுலை) ஆடிமீ 20 ந் உ.

ட்பிள்யு. டீ. குணறத்ன,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாமடல மருந்துச்சாலைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

கடைசிக் கிராமப்பட இல. 464 க்கு 1 ம் இணைப்படம். குறிச்சி—மாமடல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 14E | கடுதல்பகஹவத்தை .. | (பயிர்செய்யாத தோட்டம்) ஒரு பாதையும் கக்கூசின் ஒரு பாகமும் வைத்தியசாலை முத்தமும் | தொடம்பஹஹேயில் உள்ள ஜேமிஸ் ஏமானிஸ் | 0 | 0 | 29 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வைதப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 1 ந் தேதியிலன்று மாலே 2 மணிக்கு அம்பலந்தொட்டை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டைக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஜுலை) ஆடிமீ 19 ந உ.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மஹபொகுணுவெவ என்னும் குளத்தைத் திருத்த என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—,

பிரதமபடம் A 474. குறிச்சி—சோனகக் குறிச்சி, தங்காலே சுகாதார சங்கத்தின் எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வரிப்பண இலக்கம் 327, கலேவத்தையில் ஒரு பாகம் | வெண்பூமியும் குளக்கட்டின் ஒரு பாகம் தண்ணீர் ஊற்ற சாந்தால் கூட்டப்பட்டது | தங்காலேயில் குடியிருக்கும் எஸ். ஏ. ஒமர்தீன் | 0 | 0 | 9·2 |
| 2 | ஷை .. | வெண்பூமியும் குளக்கட்டின் ஒரு பாகமும் .. | ஷை .. | 0 | 0 | 3·7 |
| 3 | வரிப்பண இலக்கம் இல்லாத வெலே இல்மை அல்லது வறுஹேனகபல்ல | வெண்பூமி .. .. | அரசாங்கத்தாருக்கும் தங்காலேயில் உள்ள அப்துல் மஜீது | 0 | 0 | 22·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 2 ந் தேதியிலன்று மாலே 2 மணிக்கு தங்காலே வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டைக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஜுலை) ஆடிமீ 19 ந உ.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கெந்தளே கொடம்பையில் ஒரு பாதை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—

கடைசி படத்து இல. 272. குறிச்சி—கந்தளகொடம்ப.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 74 | கல்ஹேனகேவத்த .. | 2 வயதுள்ள 2 தென்னையுள்ளதும், 8 வயதுள்ள ஒரு பலாவும் | கெந்தளகொடம்பயில் இருக்கும் ஹிரி ஸப்தாமாறய என்ட கோயிலில் குடியிருக்கும் ஊறுகமுவே பஸ்ஹதிஸ்ஸ தேரோ | 0 | 0 | 5·6 |
| 75 | ஷை .. | பாதை .. | ஷை .. .. | 0 | 0 | 10·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 3 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு வளஸ்முள்ள வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டைக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஜுலை) ஆடிமீ 19 ந உ.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வெலந்தகொடயில் 216 ம் இலக்க முடிவுப்படத்தில் ஒரு பாதை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 216. குறிச்சி—வெலந்தகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 265 | நுகஹேன, நுகவத்தை .. | பங்கிரிபுல்லும், 15 வயதுள்ள ஒரு ஈரப்பலாமரமும் 2–7 வயதுள்ள கமுகமரமும் 3–15 வயதுள்ள தென்னமரமும் | வெலந்தகொடையில் இருக்கும் தொன் அந்தறயஸ் முனஸிங்ஹ | 0 | 0 | 27·6 |
| | வருபிட்டிய என்னும் குறிச்சியில் 52 ம் முடிவுப்படம் 1 ம் இலக்க குறுக்குப்படம். | | | | | |
| 128 | மஹஹேன அல்லது பகல்ல கடியேஹேன | பங்கிரிபுல்லும் 5 வயதுள்ள 1 பலாமரமும் .. | வளஸ்முள்ளே டீ. எச். விஜேசூரிய .. | 0 | 0 | 3·7 |
| 129 | நுகேகாவகொறட்டுவ .. | 3 தென்னமரம், ஒன்றின் வயது 15 மற்றது 5 வயது | வெலந்தகொடையில் இருக்கும் தொன் அந்தறயஸ் முனசிங்ஹ | 0 | 0 | 2·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 3 ந் தேதியிலன்று மாலே 2.30 மணிக்கு வளஸ்முள்ள வாடிவீட்டில் என்முன்பாகவெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டைக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஜுலை) ஆடிமீ 19 ந உ.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வெல்லறுவவில் ஓர் அரசாங்க சுயபாஷைக் கலவன் பாடசாலே கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

படத்து இல. 2,011 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்தின் 1 ம் அனுபந்தம். குறிச்சி—வடமேன் மாகாணத்தில், குருனக்கல் டிஸ்திறிக்கில், கற்றுகம்பொலஹறபத்துவில், யஹம்பத்து கோறளேயில் உள்ள வெல்லறுவ கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 71 | கஹற்றகஹவத்த அல்லது ஊேகஹவத்த .. | தென்னந்தோட்டம் .. | பிங்கிரியவைச்சேர்ந்த டபிள்யு. எ. பர்னுந்து .. | 0 | 3 | 0·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆடு (ஆகஸ்ற்) ஆவணி மாசம் 27 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு பிங்கிரிய கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருனுக்கல் கச்சேரி,
1937 ம் ஆடு (ஜூலை) ஆடிமீ 15 ந் உ.

சீ. எச். ஹார்ட்வெல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருனுக்கல் டிஸ்திறிக்.

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஓர் கிராமச்சங்க றேட்டுத் திறத்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 501. குறிச்சி—கரம்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கரம்பேத்தோட்டம் .. | தென்னந்தோட்டம் .. | ஆலங்குடாக்குடி கே. பி. சேகு சிக்காந்தர், கொழும்பு எயிற்கின் ஸ்பென்ஸ் கொம்பனிக்காரர் | 0 2 33·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிகதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆடு (செப்ரெம்பர்) புரட்டாதிமீ 6 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு புத்தளம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1937 ம் ஆடு (ஜூலை) ஆடிமீ 14 ந் உ.

ஜே. லைற்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்

இத்தா லறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுற் சொல்லப்படும் துறை ஆயக்குத்தகை 1937 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1938 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1937 ம் ஆண்டு ஆவணிமீ 9 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஏற்கபடும்.

(1) பண்ணைத்துறை. (2) அராலித்துறை.

2. ரூபா 50 கச்சேரியில் அல்லது திறைசேரியில் கட்டியதற்கு அத்தாட்சியாக பெற்றுக்கொண்ட றிசீட்டுடன் ஒப்பந்தப்பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபடவேண்டும். கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் தனது கேள்வியின்படி துறை ஆயக்குத்தகை விலைக்குக் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தவுடன் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கைக் கட்டவும் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடவும், அல்லது தேவையென்று காணும் பிணையைக் கேட்கும் நேரம் கொடுக்கவும் தவறினால் ஒப்பந்தக் கேள்விக்காகக் கட்டிய பணமும் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கின் பேரால் கட்டிய பணமும் இழந்து போவதுமன்றி தனது பெயரையும் குத்தகை பொருத்தங்களின்படி செய்யத் தவறியவர்களின் இடாப்பிலும் பதிவுசெய்வதற்கு ஏதுவாகும். ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையெழுத்திட்டபின் கேள்விக்காரர் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும். தபால் மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களும் குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்குப் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்களும் கவனிக்கப்படமாட்டாது. மேற்சொல்லிய ஒவ்வொரு குத்தகைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரம் அனுப்பப்பட வேண்டும்.

3. ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித் தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதிபெற்ற ஆதனப்பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றி லொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

4. கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

5. முடிக்குரிய த்ரணி பிணையாகக் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்ட வேண்டும்.

6. பிணையாகக் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

7. யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத் தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

8. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்து ஏசண்டு அவர்களுக்கு உண்டு.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1937 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் உ.

எம். கே. ரீ. சேண்டிஸ்,
கவண்மேந்து ஏசன்று.

---

## பருத்தி, பட்டு நூல்நூற்றல், நெசவுசெய்தல், சாயம்போடல், இவற்றைச் செய்துகாட்டும் உத்தியோகஸ்தரும், அவரின் உதவிகாரரும்.

பதிவுகாரியகர்த்தரும் வர்த்தகவர்த்தமானதிகாரியுமானவரால் கீழே குறிக்கப்படும் உத்தியோகங்களுக்கு விண்ணப்பப்பத்திரங்கள் 1937 ம் ஆண்டு ஜூலைமீ 30 ந் திகதி முடியும்வரையும் ஏற்கப்படும் :—

(a) செய்துகாட்டும் ஒரு பிரதான உத்தியோகஸ்தர்—சம்பளம் மாசம் ஒன்றுக்கு ரூபா 75 ;
(b) செய்துகாட்டும் உத்தியோகஸ்தரின் முதலாம் உதவிகாரன்—சம்பளம் மாசம் ஒன்றுக்கு ரூபா 45 ;
(c) செய்துகாட்டும் உத்தியோகஸ்தரின் இரண்டாம் உதவிகாரன்—சம்பளம் மாசம் ஒன்றுக்கு ரூபா 25.

(a) செய்துகாட்டும் உத்தியோகஸ்தராவதற்கு விண்ணப்பஞ்செய்வோர், பருத்தி, பட்டுநூல்நூற்றல், நெசவுசெய்தல், சாயம்போடல், இவற்றில் திறமைவாய்ந்தவர்களாகவும், விசைநாடாத் தறியில் (fly shuttle loom) பயிற்றுதலிலும், நெசவுசெய்தலிலும் அனுபவமுடையவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
(b) செய்துகாட்டும் உத்தியோகஸ்தரின் முதலாம் உதவிகாரனுவதற்கு விண்ணப்பஞ்செய்வோர், பருத்தி, பட்டுநூல்நூற்றல், நெசவுசெய்தல், சாயம்போடல் இவற்றில் பூரண அனுபவமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.
(c) செய்துகாட்டும் உத்தியோகஸ்தரின் இரண்டாம் உதவிகாரனுவதற்கு விண்ணப்பஞ்செய்வோர், கைதேர்ந்த நெசவுகாரர்களாயிருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பக்காரர் இருபதுக்கும் முப்பத்தைந்துக்குமிடையிலுள்ள வயசுடையவர்களாகவும், தமிழ்ப் பாஷையில் சாதாரணமாக விஷயம் நடத்தக்கூடிய அறிவுள்ளவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

3. தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் உத்தியோகங்களுக்கு நியமிக்கப்படமுன் தாங்கள் சுகபலமுள்ளவர்கள் என்பதைக் காட்டுவதற்கு ஆங்கில வைத்தியர் கொடுக்கும் சான்றுரைப்பத்திரங்கள் அனுப்பிவைக்க வேண்டியவர்களாவார்கள்.

4. இவ்வுத்தியோகங்களுக்கு உபகாரச் சம்பளமேனும், வீட்டுவாடகையேனும் அல்லது வீட்டுவாடகைச் செலவுப்பணமேனும் கொடுக்கப்படமாட்டா. இவ்வுத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்ட காலவெல்லை முதல் தடவையில் இரண்டு வருஷங்களுக்கேயாகும்.

5. விண்ணப்பப்பத்திரத்தோடு மூல நிதரிசனப்பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை. அவற்றின் பிரதிகள் மாத்திரம் இணைக்கப்படவேண்டும்.

ஜே. சீ. டபிள்யு. றெக்,
பதிவுகாரியகர்த்தரும் வர்த்தகவர்த்தமானதிகாரியும்.

பதிவுகாரியகர்த்தர் கந்தோர்,
கொழும்பு, 1937 ம் ஆண்டு ஜூலைமீ 15 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.